**கூடுதல் சார்பு நீதிமன்றம், திண்டுக்கல்**
**முன்னிலை: திரு.A.கண்ணன், B.A., B.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, திண்டுக்கல்**
**2025–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**அ.வ.எண்.616/2023**
**CNR No.TNDG040015402023**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, ரெட்டியார்சத்திரம் அஞ்சல், கொத்தப்புள்ளி கிராமம், வேலாம்பட்டி, கதவு எண்.3/133ல் வசிக்கும், பழனிசாமி மகன், இந்து சுமார் 55 வயதுள்ள கருப்பையா .... வாதி

–எதிர்–

1. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, ரெட்டியார்சத்திரம் அஞ்சல், காமாட்சிபுரம் கிராமம், சமத்துவபுரம், கதவு எண்.3/84ல் வசிக்கும், லேட்.நல்லான் மனைவி, இந்து சுமார் 40 வயதுள்ள பேபி.

2. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, கன்னிவாடி வழி, தெத்துப்பட்டி கிராமம், T.கண்ணைப்பட்டி காலனியில் வசிக்கும், லேட்.நல்லான் மகனும், C/o. கோதையம்மாள், இந்து சுமார் 20 வயதுள்ள N.மனோஜ்குமார் .... பிரதிவாதிகள்

வாதிக்கு பிராதில் கண்ட தொகையான ரூபாய்.2,51,267/–ஐ பிரதிவாதி செலுத்தவும் அசல் தொகை ரூபாய்.2,00,000த்துக்கு பிராது தேதி முதல் 12 சதவீதம் பின்வட்டியுடன் கணக்கிட்டு செலவுத் தொகையுடன் பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கக் கோரி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**தாவா மதிப்பு விபரம் –** பரிகார மதிப்பு ரூபாய்.2,51,267/–, அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணச் சட்டம் பிரிவு 22ன் படி **ரூ.7,538/–** செலுத்தப்பட்டுள்ளது.

**வழக்குமூலம் எழுந்த நாள்** – 20–06–2021, ஏப்ரல் 2023, 30–06–2023, 10–07–2023, 03–07–2023, 07–07–2023 ஆகிய நாட்களில் திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, தொத்தப்புள்ளி கிராமத்தில் உற்பத்தி.

**வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள்** – 10-08-2023

**வழக்கு கோப்பில் எடுக்கப்பட்ட நாள்** – 17-08-2023

இந்த அசல் வழக்கு இந்நீதிமன்றத்தில் 17-08-2023ம் தேதியன்று அ.வ.எண்.616/2023ஆக கோப்பில் எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. D.இளஞ்செழியன் அவர்கள் ஆஜராகியும் பிரதிவாதிகள் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டு அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்தும் வாதி தரப்பின் வாதங்களை கேட்டறிந்தும் வாதியின் சாட்சியங்களையும் சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இன்று 12-08-2025ம் தேதியன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் தீர்ப்பாணையை வழங்குகின்றது.

**<u>தீர்ப்பாணை</u>**

1. வாதிக்கு பிராது தொகையான ரூபாய்.2,51,267/-ஐ 1ம்பிரதிவாதி தனியாகவும் இறந்துபோன நல்லான் அவர்களின் சொத்துக்களிலிருந்தும் செலுத்த வேண்டும் என்றும் 2ம்பிரதிவாதியும் அவரது தகப்பனாரான இறந்துபோன நல்லான் அவர்களின் சொத்துக்களின் மூலம் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.
2. அசல் தொகையான ரூபாய்.2,00,000/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதிவரை 12 சதவீதம் ஆண்டு வட்டியுடன் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.
3. தீர்ப்பாணை தேதியிலிருந்து மொத்த அசல் தொகையான ரூபாய்.2,00,000/-ஐ செலுத்தும் வரை 6 சதவீதம் பின் வட்டியுடன் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.
4. இவ்வழக்கின் செலவுத் தொகையாக ரூபாய்.7,548/-ஐ

பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.

**செலவு தொகை விவரம்**

| வ.எண் | செலவு தொகை விபரம் | வாதிக்கு ரூ. பை. | 1ம் பிரதிவாதிக்கு ரூ. பை. |
|---|---|---|---|
| 1. | வழக்குரைக்கான வில்லை | 7,538.00 | – |
| 2. | வக்காலத்திற்கான வில்லை | 10.00 | – |
| | மொத்தம் | **ரூ.7,548.00** | **–** |

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**Sd/– Tr.A.Kannan B.A., B.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**திண்டுக்கல்.**